## 5

# தேவன் பேசுகின்றபோது

## (யோபு 38:1-42:6)

*கிரான்ட் கான்யானை (மாபெரும் வாய்க்காலை) நான் முதன் முதலாகக் கண்டபோது, பிரமிப்பினால் தாக்கப்பட்டேன். கான்யானின் விளிம்பில் நின்றுகொண்டு, சூரியன் மறைந்து கொண்டிருக்கையில் நான் "எத்துனை பெரியவர் நீரென்று..." பாடுவதாகக் கற்பனை செய்தேன். நான் கண்ட எல்லாவற்றைக்காட்டிலும், அந்தக் கான்யானில் நான் தேவனுடைய வல்லமையின் பரந்த தன்மையை அதிகமாய் உணர்ந்து அறிந்தேன். உடனடியாக எனது வினோத ஆர்வம் எழும்பிற்று. நான் அதைப் பற்றி இன்னும் அதிகமாய் அறிய விரும்பினேன். நான் அதைப் பற்றி ஆராய்ந்துபார்த்து, அதைப் பற்றி வாசிக்க விரும்பினேன். எனது பதில்செயலானது, அங்கு வந்த பல லட்சக்கணக்கான மற்றவர்களுடையதைப் போன்றதாகவே இருந்தது. புவியியல் அறிஞர்கள் அந்த மாபெரும் கான்யான் இன்னும் இருத்தல் குறித்த விளக்கத்தை ஆராய்வதில் தங்கள் வாழ்நாளையே செலவிட்டுள்ளனர், சிலர் தங்கள் உயிரையே இழந்தும் போயினர். சில உண்மைகள் அறியப்பட்டுள்ளன, ஆனால் பல பதில்கள் இன்னமும் ஒரு யூகத்தைவிடச் சற்று அதிகமானவைகளாக மாத்திரமே உள்ளன. தேவனை விசுவாசிக்கின்றவர்கள், "கிரான்ட் கான்யானுக்குக் காரணமானது எது?" என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்குக் காரணமானவர் யார் என்பதை அவர்கள் அறிந்துள்ளனர். தேவன் அதை எவ்வாறு படைத்தார் என்று நாம் ஆராய்ந்து பார்க்கலாம், ஆனால் அவரே அதற்குக் காரணமானவர் என்பதில் நாம் ஐயம் கொள்ளக்கூடாது.*

*ஆப்பிரிக்காவின் ஜிம்பாவேயில் உள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சியை நான் முதன் முதலாகக் கண்ட போது, பல இலட்சக்கணக்கான லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட வலிமைவாய்ந்த தண்ணீரானது 350 அடிகள் உயரத்தில் இருந்து வெகு வேகமாகப் பாய்ந்து கீழே இருந்த "கொதிக்கும் பானைக்குள்" விழுந்தது கண்டு அதேவிதமாகப் பிரமிப்பு அடைந்தேன். நாம் யோபுவின் புத்தகத்தின் முடிவுப்பகுதிக்கு வரும்போது, நான் அதேவிதமான பிரமிப்பின் உணர்வைக் கொண்டுள்ளேன். கடைசி ஐந்து அதிகாரங்கள், தேவனுடைய குரலொலி சுழற்காற்றில் இருந்து எவ்வாறு யோபுவினிடத்தில் பேசிற்று என்பது பற்றிக் கூறுகிறது. யோபு தமக்குப் பதில் கூறும்படி தேவனுக்கு அறைகூவல் விடுத்திருந்தார். அதற்குப் பதிலாகத் தேவன் யோபுவைக் கேள்விகேட்டார். அவர் யோபுவினிடத்தில் எண்பதுக்கும் அதிகமான கேள்விகளைக் கேட்டார், மற்றும் அவைகளுக்குப் பதில்கள் யோபுவினிடம் இருந்திருப்பினும்கூட அவற்றிற்குப் பதில் கூற*

*இயலாத அளவுக்குத் தேவன் அந்தக் கேள்விகளை மிகவிரைவாகக் கேட்டார்.*

## *யோபு குறுக்கு விசாரணை செய்யப்படுதல் (38-41)*

*யோபுவினிடத்தில் தேவன், ''இப்பொழுதும் புருஷனைப்போல் இடைக்கட்டிக்கொள். நான் உன்னைக் கேட்பேன். நீ எனக்கு உத்தரவு சொல்லு'' என்று கூறினார் (38:3). அந்தக் கேள்விகள் நம்மைப் பற்றி, உலகத்தில் கவனித்து அறியப்படக்கூடிய, ஆயினும் நமது புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதான கோட்பாடுகளை உள்ளடக்கியிருந்தன.இவை எல்லாவற்றிலும் தேவன் ஒரு முக்கியமான கருத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்: நம்மைப் பற்றித் தேவன் இந்த உலகத்தில் செய்யும் கிரியைகளைக் குறித்து நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாது என்றால், ஆவிக்குரிய வட்டாரத்தில் தேவனுடைய கிரியைகளைக் குறித்து புரிந்து கொள்வதை நாம் எவ்வாறு முன்மொழிய முடியும்? தேவனுடைய எல்லாக் கேள்விகளும், "தேவனைக் கேள்விகேட்க மனிதன் யார்?" என்று கேட்பதையே நோக்கங் கொண்டுள்ளன.*

*"நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்?" என்று தேவன் யோபுவைக் கேட்டார் (38:4). பூமிக்குத் திட்டமிட்டு அதை அஸ்திபாரப்படுத்தினவர் யார்? அதன் சுற்றுப்பாதையை நிர்ணயித்தவர் யார்? அது தனது அச்சில் சுழலுவதைத் தொடங்கி வைத்தவர் யார்? அண்டத்தின் கடியாரச் செயல் முறையானது மதிநுட்பம் வாய்ந்த ஒரு வடிவமைப்பைக் காண்பிக்கிறது. இந்த பூமியும் நமது அண்டமும், ஒரு அகராதி நூலானது அச்சகம் ஒன்று வெடித்துச் சிதறியதில் இருந்து தற்செயலாக உண்டாகியிருக்கக் கூடிய சாத்தியக்கூற்றிற்குச் சற்று அதிகமான வகையில் ஏற்பட்டதாகவே உள்ளது. மதிநுட்பம் வாய்ந்த ஒரு வடிவமைப்பாளர் மற்றும் உண்டாக்குபவர் அவசியமானவராக உள்ளார்.*

*தேவன் தாமே மேகங்களையும் கடல்களையும் உண்டாக்கினவர் என்று யோபுவுக்கு அறிவித்தார் (38:9). அவர் இரவையும் பகலையும் உண்டாக்கினார். அவர் சமுத்திரத்தின் எல்லைகளை நிலைப்பெறச்செய்தார். அவர் சமுத்திரங்களின் தண்ணீர்களுக்கு, "இம்மட்டும் வா, மிஞ்சி வராதே. உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக்கடவது" என்று கூறினார் (38:11). அவர் யோபுவினிடத்தில், "நீ விடியற்காலத்துக்குக் கட்டளை கொடுத்து, அருணோதயத்துக்கு அதின் இடத்தைக் காண்பித்ததுண்டோ?" (38:13); "நீ சமுத்திரத்தின் அடித்தலங்கள்மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில் உலாவினதுண்டோ?" (38:16) என்று கேட்டார்.*

*தேவன் மேலும் யோபுவினிடத்தில் கேள்விகளைக் கேட்டார். உண்மையில் அவர், ''உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல்மழையிருக்கிற பண்டசாலைகளைப் பார்த்தாயோ?" (38:22); "உறைந்த தண்ணீர் யாருடைய வயிற்றிலிருந்து புறப்படுகிறது?" (38:29, 30); "ஏராளமான தண்ணீர் உன்மேல் சொரியவேணும் என்று உன் சத்தத்தை மேகங்கள்பரியந்தம் உயர்த்துவாயோ? நீ மின்னல்களை*

அழைத்தனுப்பி, அவைகள் புறப்பட்டுவந்து: இதோ, இங்கேயிருக்கிறோம் என்று உனக்குச் சொல்லும்படி செய்வாயோ?" (38:26, 34-38) என்றெல்லாம் கேட்டார். தேவன் தமது கிரியைகளை யோபுவுக்கு விளக்கப் படுத்துவதற்காக, அவரைக் கடலின் ஆழங்களில் இருந்து எடுத்து வான்வெளி வீதிக்குக் கூட்டிச் சென்றார். உலகப்பிரகாரமான இந்தப் படைப்புகள் எவ்வாறு வந்தன மற்றும் எவ்வாறு தொடர்ந்து இயங்குகின்றன என்பதை யோபு புரிந்துகொள்ள இயலாதிருந்தால், அவர் தமக்கு என்ன நடந்திருந்தது என்பதை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? யோபுவுக்கு நடைபெற்றிருந்தது, ஆவிக்குரிய உலகத்தில் தேவனுடைய கிரியைகளின் ஒரு பாகமாக இருந்தது.

இயல்பான உலகத்தில் தேவனுடைய கிரியைகளை நாம் விளக்கப் படுத்தக்கூட முடியாதிருந்தால், ஆவிக்குரிய வடிவமைப்புக்களை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? தேவன் சில செய்கைகளை எவ்வாறு அல்லது ஏன் நடப்பிக்கின்றார் என்பதை நாம் அறிவதில்லை, ஆனால் அவர் இந்த உலகத்தையும் நமது வாழ்வையும் எவ்வாறு முறைப்படுத்த வேண்டும் என்று அறிகின்றார். இந்த அண்டத்தை இயக்கும் பொறுப்பைத் தேவன் நம்மிடத்தில் திருப்பினார் என்றால், அதை எவ்வாறு இயக்குவது என்பதை அறிவதில் நாம் இழப்பையே அடைவோம். ஒருவேளை தேவன் தமது வல்லமையை ஒருபக்கமாக ஒதுக்கிவைத்துவிட்டு, இந்த அண்டத்தை நிறுத்திவைத்து, மனிதரிடத்தில் "இதோ அது இங்குள்ளது. நீ அதை எடுத்துக் கொண்டு இப்போது முதல் அதை நீயே இயக்கு" என்று கூறுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். அதை மீண்டும் எவ்வாறு இயக்குவது என்பதற்கு இந்த முழு உலகத்திலும் அறிவோ அல்லது புரிந்து கொள்ளுதலோ இராது.

இந்த அண்டத்தை இயக்குவது எப்படி என்பதைத் தேவன் அறிந்திருக்கின்றார் என்றால், நமது ஆவிக்குரிய மற்றும் நித்தியமான நன்மைக்காக நமது வாழ்வை எப்படி முறைப்படுத்துவது என்றும் அவர் அறிந்திருக்கின்றார் என்பது நிச்சயமாக உள்ளது. அவர் உங்கள் வாழ்வைக் கொண்டிருக்க அனுமதியுங்கள். அதைக்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று அவர் அறிந்திருக்கின்றார். அவர் உங்கள் வாழ்வைக் கொண்டு நீங்கள் புரிந்துகொள்ளாத சிலவற்றைச் செய்கின்றார், அது ஒன்று மாத்திரமே நீங்கள் புரிந்து கொள்ளாத விஷயமாக இருப்பதில்லை. தேவனுடைய கிரியைகளைப் புரிந்து கொள்ளுதல் என்பது நமக்கு அவசியமானதல்ல; தேவனுடைய கிரியைகளின் மீது விசுவாசம் கொண்டிருத்தல் என்பதே நமக்கு அவசியமானதாக உள்ளது.

அடுத்ததாக தேவன், தமது வல்லமையையும் அறிவையும் வலியுறுத்து வதற்காக, யோபுவின் கவனத்தை விலங்குகளின் இராஜ்யத்திற்குக் கொண்டுவந்தார். வனவிலங்குகளின் உள்ளுணர்வு, வலிமை, வனப்பு மற்றும் உணவு ஆகியவற்றைக் கொடுப்பது யார்? சிங்கத்திற்கு இரையை வேட்டையாடித் தருவதையோ அல்லது இளம் சிங்கங்களின் பசியை ஆற்றுவதையோ யாரால் செய்ய முடியும்? காக்கைக் குஞ்சுகளுக்கு உண வளிப்பது யார்? (38:39-41). மலைகளில் உள்ள வரையாடுகள் எப்போது குட்டிகளை ஈனுகின்றன? மான்கள் ஒரு குறிப்பிட்ட வயது வரையிலும்

தங்கள் பெற்றோர்களுடன் இருந்துவிட்டு பின்பு மறுபடியும் திரும்பி வராதபடி அவற்றை விட்டுப் பிரிந்து செல்வது ஏன்? (39:1-4). காட்டுக் கழுதையை உண்டாக்கி, அவற்றைத் தன்னிச்சையாகத் திரியவிட்ட து யார்? காண்டாமிருகத்தை உழுவதற்குப் பழக்கப்படுத்த முடியாதது ஏன்? (39:5-12). தேவனுடைய கேள்விகளால் எதிர்கொள்ளப்பட்ட யோபு, மனிதன் புரிந்துகொள்ளக் கூடியது எவ்வளவு கொஞ்சமாக உள்ளது என்று காணத்தொடங்கினார்.

பின்பு தேவன் தமது கவனத்தைத் தீக்குருவிகளின் பக்கமாகத் திருப்பினார் (39:13-18). மனிதர்கள் அல்லது காட்டு விலங்குகள் மிதித்து நசுக்கிவிடும்படியாகத் தீக்குருவிகள் தனது முட்டைகளை மணலில் மதியீனமாக இட்டுவைப்பது ஏன்? அது தனது குஞ்சுகள் தன்னுடையதல்லாதவைகள் போல் அவற்றைக் கவனியாது விடுவது ஏன்? அந்தப் பறவைக்குத் தேவன் ஞானத்தைக் கொடாமல் விலக்கிவைத்தார், ஆயினும் அவர் அதன் தேவைகளை அளித்தார். அது விரைவுமிக்க குதிரையைவிட வேகமாக ஓடக்கூடிய வரத்தைக் கொண்டுள்ளது.

குதிரையைப் பற்றிப் பேசினால், அதற்குப் பலத்தையும் யுத்தத்திற்கான உள்ளுணர்வையும் கொடுத்தது யார்? (39:19-25). இராஜாளி தனது செட்டையை விரிப்பதும், கழுகு தனது கூட்டை ஏற்படுத்துவதற்காக மலைகளின்மீது உயரப் பறப்பதும் ஏன்? இந்தப் பறவைகள் அவ்வளவு தூரத்தில் இருந்து தங்கள் இரையைக் காணக்கூடும்படிக்கு மிகவும் கூர்மையான கண்களைக் கொடுத்தது யார்? இறந்த உடல்கள் எங்கிருந்தாலும் இந்தக் கழுகுகள் தங்கள் உள்ளுணர்வால் அதை உணர்வது எப்படி? (39:26-30). நாம் உணர்ந்தரிய இயலாத உள்ளுணர்வுகளைத் தேவன் தமது படைப்புகளுக்குக் கொடுத்தார்.

கேள்விகேட்டல் தொடர்ந்தபோது, தேவன் யோபுவினிடம், பிகெமோத் (இது அநேகமாக ஒரு நீர்யானையாக, காண்டாமிருகமாக அல்லது யானையைப் போன்ற உயிரினமாக இருக்கலாம்) என்ற மிருகத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்படி கூறினார். அது ஒரு எருதைப் போலப் புல்லைத் தின்கிறது, ஆனால் மாபெரும் பலம் கொண்டுள்ளது. அதன் எலும்புகள் இரும்புக்கம்பிகளைப் போல் உள்ளது (இது தமிழ் வேதாகமத்தில் "அதின் எலும்புகள் கெட்டியான வெண்கலத்தைப் போலவும், அதின் அஸ்திகள் இரும்புக் கம்பிகளைப்போலவும் இருக்கிறது" என்றுள்ளது {யோபு 40:18}). இது தேவன் படைத்த எல்லா மிருகங்களைக் காட்டிலும் மிகவும் உக்கிரம் வாய்ந்ததாக உள்ளது. அது நீரோடையில் உள்ள தாமரைச் செடிகள் மற்றும் வில்லோ மரங்களின் நிழல்களின் கீழ் படுத்துக் கொள்கிறது (இது தமிழ் வேதாகமத்தில், "அது நிழலுள்ள செடிகளின் கீழும், நாணலின் மறைவிலும், உளையிலும் படுத்துக்கொள்ளும்" என்றுள்ளது {யோபு 40:21}). இது ஒரு நதியின் நீரையை குடித்துவிடும் அளவுக்கு மிகவும் பெரியதாக உள்ளது. இதன் மூக்கில் ஒரு வளையத்தை இட்டு இதை நடத்திச் செல்ல ஒருவராலும் முடியாது. இப்படிப்பட்ட ஒரு மிருகத்தைச் சர்வவல்லமை நிறைந்த ஒருவரைத் தவிர வேறு யாரால் உண்டாக்க முடியும்? (40:15-24).

*லிவியாதானைப் பற்றி (இது முதலைபோன்ற ஒரு உயிரினமாகும், ஒருவேளை இது இல்லாது ஒழிந்துபோன மிருகமாக இருக்கலாம்) ஆழ்ந்து சிந்திக்கும்படியும் யோபுவுக்குக் கூறப்பட்டது. அதிகாரம் 41ல் மிக உக்கிரமான இந்த நீர்வாழ் மிருகத்தைப் பற்றி விவரிப்புத் தரப்பட்டுள்ளது. மற்ற மிருகங்களுக்குக் குறிப்பிடப்பட்டது போன்ற அதே கருத்துக்கள் வலிமை வாய்ந்த இந்த மிருகத்தை விவரிப்பதற்கும் தரப்பட்டுள்ளது. இந்த உயிரினங்களின் மிருகபலமானது மனிதரின் கற்பனைக்கு மிகவும் திகிலூட்டக் கூடியதாக உள்ளது. இவற்றைப் படைத்தவர் சகல வல்லமைக்கும் ஆதார மூலமாக இருக்கின்றார். இந்த படைப்புயிரின் வலிமை என்பது நமது புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறதென்றால் இதைப் படைத்தவரின் வல்லமையை நிச்சயமாகவே நாம் புரிந்துகொள்ள இயலாது.*

*தேவன் யோபுவினிடத்தில், ''மரணவாசல்கள் உனக்குத் திறந்த துண்டோ?" என்று கேட்டார் (38:17). உயிருடன் இருப்பவர்களில், மரண நிழலின் வாசல்களைக் கண்டுள்ளது யார்? மரணம் என்றால் என்ன என்பதை நாம் யாக்கோபு 2:26ல் வாசிக்க முடியும்: "... ஆவியில்லாத சரீரம் செத்தாயிருக்கிறது ..." தேவன் மாத்திரமே உயிரின் ஆவியைக் கொடுக்கக் கூடியவராக இருக்கின்றார் (பிர. 12:7). உயிரைக் கொடுக்கின்ற அந்த ஆவியானது, மரணத்தின்போது தன்னைக் கொடுத்த தேவனிடத்திற்குச் செல்லுகிறது. நாம் இந்த உண்மைகள் யாவற்றையும் அறிகின்றோம், ஆனால் இவற்றை அறிதல் என்பதும் புரிந்துகொள்ளுதல் என்பதும் இரு வேறுபட்ட விஷயங்களாக உள்ளன!*

*அவர் யோபுவினிடம், "அந்தக் காரணங்களில் ஞானத்தை வைத்தவர் யார்?" என்று கேட்டார் (38:36). உள்ளத்தில் புத்தியைக் கொடுத்தது யார்? மனிதரின் சிந்தையையும் இருதயத்தையும் யாரால் புரிந்துகொள்ள முடியும்? மனிதனின் இருதயத்தையும், சிந்தையையும், நோக்கங்களையும் நாம் புரிந்துகொள்ள முடியாது என்றால், தேவனுடையதை நாம் புரிந்து கொள்ளுதல் என்பதை எப்படி எதிர்பார்க்க முடியும்? தேவனை நியாயந் தீர்ப்பதை யோபு தமக்குத் தாமே எடுத்துக் கொண்டிருந்தார். தேவன், "நீ என் நியாயத்தை அவமாக்குவாயோ? நீ உன்னை நீதிமானாக்கிக் கொள்ளும்படிக்கு என்மேல் குற்றஞ்சுமத்துவாயோ?'' என்று பதில் அளித்தார் (40:8).*

*தேவன், "யோபுவே, இந்த விஷயங்களில் எதைப் பற்றியாவது நீ அறிந் திருக்கின்றாயா? அவ்வாறு நீ அறிந்திருந்தால் அது, இந்த விஷயங்கள் நடைபெறுவதற்கு முன்னரே நீ ஏற்கனவே பிறந்திருந்தாய் என்பதனாலா? அல்லது பூமியில் நீ ஒரு நீண்ட வாழ்வைப் பெற்றதில் இருந்து இந்த விஷயங் களை அறிந்திருக்கின்றாயா?" என்று கேட்டார் (38:21).*

## *யோபு இணக்கமாக்கப்பட்டார் (42:1-6)*

*தேவன் பேசியபோது அவர் யோபுவின் கவனத்தைப் பெற்றிருந்தார். யோபு கவனித்துக் கேட்டார். தேவன் பேசுகின்றபோது அவர் பேசுகின்ற*

*தைக் கவனிக்கும் மனிதர்கள் அவருக்குத் தேவை. சர்வவல்லவருடன் வாதிடுதல் என்பது முரட்டுத்தனத்தின் உச்சமாக உள்ளது.*

*யோபு தாழ்மையானார். இருமுறை மாத்திரமே பதில்கூற அவர் முயற்சி செய்தார். அவர் பின்வருமாறு மாத்திரம் கூறுமளவுக்கு மிகவும் தாழ்மையானார்: “இதோ, நான் நீசன். நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன். என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன். நான் இரண்டொருதரம் பேசினேன். இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன்” (40:4, 5). பிற்பாடு அவர், “தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்” என்று கூறினார் (42:2).*

*யோபு ஒளியூட்டப்பட்டார். அவர் தமது அறியாமையில் பேசியிருந்ததை உணர்ந்தறிந்தார். அவர், “நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன்” (42:3); “என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது” (42:5) என்று கூறினார்.*

*யோபு தம்மையே பார்த்துக் கொண்டார். ஏசாயா 6:5ல் ஏசாயாவைப் போல், யோபு தேவனைப் பார்த்தபோது தம்மையே பார்த்துக் கொண்டார். அவர், “இதோ, நான் நீசன்” என்றும் (40:4), “ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்” (42:6) என்றும் கூறினார். தேவனுடைய நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.*

## *முடிவுரை*

*யோபு ஏற்கனவே ஒரு நல்ல மனிதராக இருந்திருந்தார், ஆனால் எந்த ஒரு மனிதரும் தாம் இன்னும் மேன்மையானவர் ஆகக்கூடாத அளவுக்கு நல்லவராக இருப்பதில்லை. யோபுவைப் புடமிடுவதற்கான சோதனையானது அவரை ஒரு மேன்மையான மனிதராக்கிற்று. அவரது எண்ணப் போக்கு ஒரு மாபெரும் மாற்றத்தைப் பெற்றுக்கொண்டிருந்தது. யோபு நல்லவர் என்று ஊர்ஜிதம் பண்ணப்பட்டார்.*

*தேவன், யோபுவின் மூன்று நண்பர்களிடத்தில் பிரியமாய் இருக்கவில்லை, ஏனென்றால் அவர்கள் அவரை (தேவனை) மிகச்சரியான வகையில் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை (42:7). அவர்களின் பாவங்களுக்காக அவர்கள் நிவாரணப்பலிகளைச் செலுத்தும்படியும் அவர்களுக்காக யோபு ஜெபிக்கும்படியும் அவர்(தேவன்) அவர்களிடத்தில் கூறினார் (42:8). அவர்கள், தேவன் தங்களுக்குக் கூறியபடியே செய்தனர்; பின்பு நாம், “ ... அப்பொழுது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்” என்று வாசிக்கின்றோம் (42:9).*

*யோபுவினிடத்தில் தேவன் பேசியதைத் தீவிரமாக ஆழ்ந்து சிந்திக்கும் எவரும், தேவனுடைய வல்லமை பற்றிய ஆதாரங்களினால் மனம் ஈர்க்கப்படுவார். இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருப்பினும், தேவன் இருக்கின்றார் என்பதற்கு இன்றளவும் செயல்விளைவுள்ள ஒரு ஆய்வுநூலாக உள்ளது. தேவன் இன்றைய*

நாட்களிலும் இன்னமும் இயற்கையின் மூலமாகப் பேசுகின்றார். அவரது சிருஷ்டிக்கும் வல்லமை மற்றும் பலம் ஆகியவற்றிற்கு நாம் எல்லா இடங்களிலும் ஆதாரத்தைக் காணுகின்றோம். மாறிவருகிற பருவங்கள், மலருகிற மலர்கள், மற்றும் விலங்குகளும் பூச்சிகளும் கூட வடிவமைப்பு மற்றும் திட்டமிடுதல் ஆகியவற்றிற்கு ஆதாரத்தைக் காண்பிக்கிறது. இந்த வடிவமைப்பின் ஆதாரம் யோபுவின் நாட்களில் இருந்து இன்றளவும் ஒரே சீராக இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து அறிகின்றபோது அது இன்னமும் அதிகமாக நம்பக்கூடியதாக உள்ளது. தேவனுடைய வல்லமையை அவர் (யோபு) நம்பி இணங்கச் செய்த அதே ஆதாரமானது இன்னமும் இங்குள்ளது.